**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். நாங்குநேரி**
**முன்னிலை: திருமதி.ச.மஞ்சுளா.பி.ஏ.,எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாங்குநேரி**

**2026ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் வியாழன்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.17/2018</u>**

பலவேசம் ....வாதி

/எதிர்/

1. அந்தோணி மிக்கேல்
2. தேவராஜ்
3. செல்வராஜ்
4. வெள்ளத்துரை .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 07.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.இ.இராவணசிவன்.பி.ஏ.பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.S.சுரேந்திரன்.பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இருதரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

## <u>தீர்ப்புரை</u>

**1)** 2ம் தபசில் 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என விளம்புகை செய்து, அதற்கு பின்னீடாக 2ம் தபசில் சொத்தின் சுவாதீனத்தினை காலிமனையாக நீதிமன்றம் குறிப்பிடுகிற தேதிக்குள் வாதி வசம் சுவாதீனம் தர உத்தரவிடவும், மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதியின் வழக்குரையின் சுருக்கம் :**

வழக்கு 1ம் தபசில் சொத்தும் இதரச் சொத்தும் முன்னர் வீரமார்த்தாண்டம் பிள்ளையும், நம்பி மார்த்தாண்டம் பிள்ளையும் 1ம் தபசில் சொத்தினை வழக்கில் இல்லாத மாடக்குடும்பன் என்பவருக்கு 07.12.1942ல் கிரையம் கொடுத்து, மேற்படி மாடக்குடும்பன் தனது கிரைய காலம் முதல் 1ம் தபசில் சொத்தினை சுவான்தார் நிலையில் அனுபவம் செய்து வந்து பின்னாளில் 30.01.1993ல் எவ்வித ஆவணமும் பிறப்பிக்கா காலம் சென்றுவிட்டதாகவும், மேற்படி நபரின் மனைவி வடிவு அம்மாளும் 19.06.1976ல் காலம் சென்றுவிட்டதாகவும், மேற்படி தம்பதியருக்கு பண்டாரம், ஆறுமுகம், செல்லையா மற்றும் பலவேசம் என்ற வாரிசுகள் உள்ள நிலையில், மேற்படி பண்டாரம் 6 வாரிசுகளை விட்டுவிட்டு 07.01.1995ல் காலம் சென்றுவிட்டதாகவும், மேற்படி ஆறுமுகம் 5 வாரிசுகளை விட்டுவிட்டு 20.10.1983ல் காலம் சென்றுவிட்டதாகவும், எனவே வாதி மட்டுமே உள்ள நிலையில், 1ம் தபசில் சொத்தினை மாடக்குடும்பன் மறைவிற்கு பிறகு மேற்படியாரது வாரிசுகள் பாகம் ஏற்படுத்தாமல் தபசில் சொத்தினை அனுபவம் செய்து வந்ததால், வாதி அவரது சகோதரர்களுக்காகவும் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் வழக்கு 1ம் தபசில் மேல்பக்கம் தவிர்த்து கீழ்பக்கம் வாதி குடும்பத்தாருக்கு 5 வீடுகள் உள்ள நிலையில், மேற்படி தபசிலின் புல எண்.1118A என்றும், 1ம் தபசில் சொத்து நில உடமை மேம்பாட்டுத்திட்டத்தில் புல எண்.1118A/9 என உட்பிரிவு செய்யப்பட்டு, மேற்படி திட்டத்தில் வாதியின் தந்தை 1942ல் பெற்ற கிரையப்பத்திரப்படி செண்ட் 43 பாத்தியப்பட்டுள்ள நிலையில், மேற்படி நிலஉடமைமேம்பாட்டு திட்டத்தில் அளவு குறைவாக கூறப்பட்டுள்ளதாகவும், இருப்பினும் 1ம் தபசில் சொத்தானது 1942ல் கிரையம் பெற்றதால் வாதிக்கும், வாதியின் சகோதரர்கள் வாரிசுகளுக்கும் சென்ட் 43 பாத்தியம் என்றும், மேற்படி திட்டத்தில் பட்டா தவறுதலாக வழங்கப்பட்டது குறித்து வாதி மற்றும் வாதியின் சகோதரர்களுக்கு தற்போது தான் தெரியவந்ததாகவும், மேலும் 2ம் தபசில் சொத்து என்பது 1ம் தபசில்

சொத்தின் ஒரு பகுதி என்றும், மேற்படி சொத்து 1ம் தபசிலில் சொத்தின் மேல்புறம் உள்ளது என்றும், மேற்படி 1ம் தபசிலுக்கு மேல்புறம் தான் பிரதிவாதிகள் நிலம் உள்ளதாகவும், வழக்கு 4ம் பிரதிவதி நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் உள்ள பட்டாவில் ஏற்பட்ட தவறினை வைத்துகடந்த ஆகஸ்ட் மாதம் 1ம் தபசிலின் ஒரு பகுதியான 2ம் தபசிலை உட்படுத்தி அதில் கட்டுமானம் செய்துவிட்டதால், வழக்கு வாதி ஒய்வு பெற்ற நில அளவையர் வழி 1942ல் ஏற்பட்ட கிரைய சொத்தினை அளவீடு செய்து தனது எல்கையை நிர்ணயம் செய்ததாகவும், மேற்படி அளவின் மூலம் 2ம் தபசில் சொத்து 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என அறியப்பட்டதால், வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் சுருக்கம்** :

வாதியின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்வழக்குரையில் வியக்கத்தமாய் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர பிராதில் கண்ட ஏனைய சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை என்றும், வாதிகள் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், வழக்கு தபசில் சொத்தான புல எண்.1118Aல் வாதி கூறும் மாடக்குடும்பன் என்பவருக்கு 07.12.1942 நாளிட்ட கிரைய ஆவணம் வழி 33 செண்ட் நிலம் மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், வாதி மோசடியாக தாவா சொத்தின் மேற்கு பகுதியில் உள்ள 4ம்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தினை சட்ட விரோதமாக அபகரிக்க வேண்டி 07.12.1942 நாளிட்ட ஆவணத்தின் சான்று நகலை 43 செண்ட் என திருத்தம் செய்து நீதிமன்றத்தை ஏமாற்றி தனக்கு உரிமையில்லாத சொத்து பொறுத்து தீர்ப்பாணை பெற இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் வாதி வழக்குசொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் மாடக்குடும்பனின் அனைத்து வாரிசுகளும் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், மேலும் வழக்கு பரிகாரமானது 4ம் பிரதிவாதி பொறுத்து மட்டுமே கேட்கப்பட்டுள்ள நிலையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பு என்றும்,

மேலும் வாதி குறிப்பிட்டுள்ள தபசில் சொத்தின் எல்கை மற்றும் அளவுகள் தவறானது என்றும், எனவே வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களைது வனைந்துள்ளது.

**வழக்கெழு வினாக்கள்**

1) Whether the plaintiff is the lawful owner of the suit 2nd schedule property?

2) Whether the Plaintiff is entitled to the relief of declaration as prayed for?

3) Whether the plaintiff is in entitled to the relief of recovery of possession as prayed for?

4) To what other reliefs?

5) வாதி தரப்பில், வாதி பலவேசம் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7, பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதியான செல்வராஜ் என்பவர் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **இருபக்கவாதுரை**

**அ.வாதி பக்கம் வாதுரை**

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதுரையில், வழக்கு 1ம் தபசில் சொத்தும் இதரச் சொத்தும் முன்னர் வீரமார்த்தாண்டம் பிள்ளையும், நம்பி மார்த்தாண்டம் பிள்ளையும் 1ம் தபசில் சொத்தினை வழக்கில் இல்லாத மாடக்குடும்பன் என்பவருக்கு 07.12.1942ல் கிரையம் கொடுத்து, மேற்படி மாடக்குடும்பன் தனது கிரைய காலம் முதல் 1ம் தபசில் சொத்தினை சுவான்தாரர் நிலையில் அனுபவம் செய்து வந்து பின்னாளில் 30.01.1993ல் எவ்வித ஆவணமும்

பிறப்பிக்காது காலம் சென்று விட்டதாகவும், மேற்படி நபரின் மனைவி வடிவு அம்மாளும் 19.06.1976ல் காலம் சென்றுவிட்டதாகவும், மேற்படி தம்பதியருக்கு பண்டாரம், ஆறுமுகம், செல்லையா மற்றும் பலவேசம் என்ற வாரிசுகள் உள்ள நிலையில், மேற்படி பண்டாரம் 6 வாரிசுகளை விட்டுவிட்டு 07.01.1995ல் காலம் சென்றுவிட்டதாகவும், மேற்படி ஆறுமுகம் 5 வாரிசுகளை விட்டுவிட்டு 20.10.1983ல் காலம் சென்றுவிட்டதாகவும், எனவே வாதி மட்டுமே உள்ள நிலையில், 1ம் தபசில் சொத்தினை மாடக்குடும்பன் மறைவிற்கு பிறகு மேற்படியாரது வாரிசுகள் பாகம் ஏற்படுத்தாமல் தபசில் சொத்தினை அனுபவம் செய்து வந்ததால், வாதி அவரது சகோதரர்களுக்காகவும் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு 4ம் பிரதிவாதி நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் உள்ள பட்டாவில் ஏற்பட்ட தவறினை வைத்து கடந்த ஆகஸ்ட் மாதம் 1ம் தபசிலின் ஒரு பகுதியான 2ம் தபசிலை உட்படுத்தி அதில் கட்டுமானம் செய்துவிட்டதால், மேற்படி சொத்தின் சுவாதீனத்தை காலி செய்ய வேண்டி வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை.7 விதி.3ன் கீழ் சொத்தை விவரிக்கும் போது சர்வே எண் அல்லது எல்கைகளின் அடிப்படையில் விவரிக்க வேண்டும் என்று தான் குறிப்பிட்டுள்ளது. சொத்துக்களின் அளவுகளில் பிரச்சனை இருக்கும் போது விஸ்தீரணத்தை விட எல்கைமால்களே மேலோங்கும் என்ற அடிப்படையிலும், சுவாதீன பரிகாரம் பொறுத்து கூட்டு உரிமையாளர்கள் சார்பாக ஒரு உரிமையாளர் தாக்கல் செய்யும் வழக்கு நிலைக்கத்தக்கது என்றும், 4ம் பிரதிவாதி 2ம் தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வாதி கட்சி செய்யும் நிலையில், பிரதிவாதிகள், 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என தெரிவிக்கும் பட்சத்தில் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி தான் பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், நமது மாண்பமை உயர்நீதிமன்ற முன்தீர்ப்புகளான 1984 MLJ (2), 2011(1) MWN 786, 2007(1) CTC 577, 2009(1) MLJ 67, 2004(5) CTC 344, 1990(2)LW378, 2003(1) MLJ 326, 2014(2) LW 919,

1997(1) CCC 264, 1995(2) CCC 480(P&H), 1990 CCC 557(KERALA), 1997(1) CCC 144 (P&H), சுட்டிக்காண்பித்து வாதி கோரும் பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று வாதம் முன்நிறுத்தப்பட்டுள்ளது.

**ஆ.பிரதிவாதி பக்கம் வாதுரை**

பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும், வாதி குறிப்பிடும் 1ம் தபசில் சொத்தின் புல எண்.1118/A 43 செண்ட் என்று வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் திருத்தம் செய்துள்ளதால், வா.சா.ஆ.1 ஆவணத்தில் திருத்தம் செய்து அசல் வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளதால், மேலும் வாதியின் வழக்கினை நிருபிக்கும் சுமை வாதியை சார்ந்தது ஆகும் என்றும், வாதியின் தந்தை கிரையம் பெற்ற ஆவணத்தில் உள்ள சர்வே எண்.1118/A என்பது தான் தற்போது 1118/A9 என்றாகி உள்ளது என்பதற்கு வாதி தரப்பில் எவ்வித சாட்சியங்களும் முன்வைக்கவில்லை என்றும், 2ம் தபசில் சொத்து 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என விளம்புகை பரிகாரம் வாதி கோரியிருந்தாலும், 1ம் தபசில் சொத்து முழுமையாக வாதிக்கு பாத்தியப்பட்டது அல்ல என பிரதிவாதிகள் ஆட்சேபிக்கும் பட்சத்திலும், வாதி பட்டா ஆவணத்தின் படி 41 ¾ செண்ட் பாத்தியப்பட்டதாக சாட்சியத்தில் கூறியும், பட்டா முதலான ஆவணங்கள் வாதியின் வழக்கை நிருபிக்க தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வாதி கோரும் பரிகாரமானது வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் வாதம் முன்நிறுத்தப்பட்டுள்ளது.

**7) தீர்வு**

எழுவினாக்கள் 1 முதல் 3 வரை ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக உள்ள நிலையில் அவை ஒரு சேர பரிசீலனைக்கு எடுக்கப்படுகிறது.

**8) எழுவினா 1 முதல் 3 க்கான பரிசீலனையும் அதன் முடிவும்:**

1) Whether the plaintiff is the lawful owner of the suit 2nd

schedule property?

2) Whether the Plaintiff is entitled to the relief of declaration as prayed for?

3) Whether the plaintiff is in entitled to the relief of recovery of possession as prayed for?

வழக்கு 1ம் தபசில் சொத்தும் இதரச் சொத்தும் முன்னர் வீரமார்த்தாண்டம் பிள்ளையும், நம்பி மார்த்தாண்டம் பிள்ளையும், 1ம் தபசில் சொத்தினை வழக்கில் இல்லாத மாடக்குடும்பன் என்பவருக்கு 07.12.1942ல் கிரையம் கொடுத்துள்ளது வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. மேற்படி மாடக்குடும்பன் தனது கிரைய காலம் முதல் 1ம் தபசில் சொத்தினை சுவான்தார் நிலையில் அனுபவம் செய்து வந்து எவ்வித ஆவணமும் பிறப்பிக்காது பின்னாளில் 30.01.1993ல் காலம் சென்றுள்ளது வா.சா.ஆ.2 ஆன இறப்பு சான்றிதழின் மூலம் தெரிகிறது. மேற்படி நபரின் மனைவி வடிவு அம்மாளும் 19.06.1976ல் காலம் சென்றுள்ளது. வா.சா.ஆ.3 ஆன இறப்பு சான்றிதழ் மூலம் தெரிகிறது. மேற்படி தம்பதியருக்கு பண்டாரம், ஆறுமுகம், செல்லையா மற்றும் பலவேசம் என்ற வாரிசுகள் உள்ள நிலையில், மேற்படி பண்டாரம் 6 வாரிசுகளை விட்டுவிட்டு 07.01.1995ல் காலம் சென்றுவிட்டது வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலமும், மேற்படி ஆறுமுகம் 5 வாரிசுகளை விட்டுவிட்டு 20.10.1983ல் காலம் சென்றுவிட்டது வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலமும் தெரிகிறது. எனவே வாதி மட்டுமே உள்ள நிலையில், 1ம் தபசில் சொத்தினை மாடக்குடும்பன் மறைவிற்கு பிறகு மேற்படியாரது வாரிசுகள் பாகம் ஏற்படுத்தாமல் தபசில் சொத்தினை அனுபவம் செய்து வந்ததால், வாதி அவரது சகோதரர்களுக்காகவும் தான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், தபசில் புல எண்.1118A என்பது 1118A/9 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றும், அதன் விஸ்தீரணம் 43 செண்ட் என்றும், பட்டா தவறுதலாக குறைவான பரப்பு குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றும், 1ம் தபசில் சொத்தின் மேல்பகுதி 1 ¾ செண்ட் 2ம் தபசில் சொத்து என்றும், மேற்படி 1ம் தபசிலுக்கு மேல்புறம் தான் பிரதிவாதிகள் நிலம்

உள்ளதாகவும், வழக்கு 4ம் பிரதிவாதி நில உடமை மேம்பாட்டு திட்டத்தில் உள்ள பட்டாவில் ஏற்பட்ட தவறினை வைத்து கடந்த ஆகஸ்ட் மாதம் 1ம் தபசிலின் ஒரு பகுதியான 2ம் தபசிலை உட்படுத்தி அதில் கட்டுமானம் செய்துவிட்டதால், வழக்கு வாதி ஒய்வு பெற்ற நில அளவையர் வழி 1942ல் ஏற்பட்ட கிரைய சொத்தினை அளவீடு செய்து தனது எல்கையை நிர்ணயம் செய்ததாகவும், மேற்படி அளவின் மூலம் 2ம் தபசில் சொத்து 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என அறியப்பட்டதால், வாதியால் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) பிரதிவாதிகள் தரப்பில் வழக்கு தபசில் சொத்தான புல எண்.1118Aல் வாதி கூறும் மாடக்குடும்பன் என்பவருக்கு 07.12.1942 நாளிட்ட வா.சா.ஆ.1 ஆன கிரைய ஆவணம் வழி 33 செண்ட் நிலம் மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், வாதி மோசடியாக தாவா சொத்தின் மேற்கு பகுதியில் உள்ள 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தினை சட்ட விரோதமாக அபகரிக்க வேண்டி வா.சா.ஆ.1 ஆவணத்தில் 43 செண்ட் என திருத்தம் செய்து நீதிமன்றத்தை ஏமாற்றி தனக்கு உரிமையில்லாத சொத்து பொறுத்து தீர்ப்பாணை பெற இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் வாதி வழக்குசொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் மாடக்குடும்பனின் அனைத்து வாரிசுகளும் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் என்றும், மேலும் வழக்கு பரிகாரமானது 4ம் பிரதிவாதி பொறுத்து மட்டுமே கேட்கப்பட்டுள்ள நிலையில் 1 முதல் 3 பிரதிவாதிகள் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பு என்றும், மேலும் வாதி குறிப்பிட்டுள்ள தபசில் சொத்தின் எல்கை மற்றும் அளவுகள் தவறானது எனவே வாதி கோரும் பரிகாரமானது வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

10) வாதியால் 2ம் தபசில் 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என விளம்புகை செய்தும், அதற்கு பின்னீடாக 2ம் தபசில் சொத்தின் சுவாதீனத்தினை காலிமனையாக ஒப்படைக்க கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதா

என்று பார்க்கும் போது, 2ம் தபசில் சொத்தானது 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என்று வாதி கூறி வாதியின் தந்தையின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதியுடன் பிறந்த சகோதரர்களின் இறப்பு சான்றிதழானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராது தபசில் சொத்து விவரத்தில் 1ம் தபசில் சொத்தில் புல எண்.1118A/9 செண்ட் 43 என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்திலும் வழக்கு தபசில் சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 43 செண்ட் என்று திருத்தம் செய்துள்ளது தெரியவருகிறது. மேலும் வாதியின் தந்தை பெயரில் உள்ள 06.12.1942 தேதியிட்ட கிரைய ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலக நகலான பி.சா.ஆ.1 ஆவணத்தில் அயன்புஞ்சை சர்வே எண்.1118/Aம் நிர் ஏ10 செ85ல் தி.மா. சிவசுப்பிரமணிய தேவர் நிலத்துக்கு கிழக்கு சர்வே எண்.1125ம் நிலத்துக்கு தெற்கு வள்ளியம்மை குடும்பச்சி நிலத்துக்கு மேற்கு லோகால்பண்டு ரோட்டுக்கு வடக்கு இதற்குப்பட்ட செண்ட் 43 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

11) வாதி தரப்பில் பிரதிவாதிக்கும் தபசில் சொத்துக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்பதால் தான் தபசில் சொத்திற்கான உரிமை அல்லது வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் வாதி 2ம் தபசில் சொத்து 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என்றும், அது பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், வாதியின் வழக்கை நிருபிக்கும் சுமை வாதியை சார்ந்தது ஆகும் என்றும், பிரதிவாதிகளின் வழக்கில் உள்ள குறைகளை கொண்டு வாதி கோரும் பரிகாரத்தை நிருபிக்க இயலாது என்பதால் தபசில் சொத்தான சர்வே எண்.1118A/9ல் விஸ்தீரணம் 43 செண்ட் வாதிக்கும் அவரது சகோதரர்களுக்கும், அவர்களது தந்தை மாடக்குடும்பனை தொடர்ந்து பாத்தியப்பட்டுள்ளது என்பதை நிருபிக்கும் சுமை வாதியை சார்ந்தது ஆகும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வா.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.1 ஆவணங்கள் இரண்டும் 06.12.1942 தேதியிட்ட வாதியின் தந்தையால் கிரையம் பெறப்பட்ட ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் என்பது நன்கு தெரியவருகிறது. மேற்படி ஆவணத்தின் மூலம் வாதியின் தந்தை தபசில் சொத்தில் மற்றொரு சொத்தும் சேர்த்து சர்வே எண்.1125ல் 24 செண்டும், சர்வே எண்.1118Aல் 33 செண்டும் சேர்த்து 57 செண்டுகள் கிரையம் பெற்றுள்ளதாக பி.சா.ஆ.1 ஆவணத்திலும், சர்வே எண்.1125ல் 24 செண்டும், சர்வே எண்.1118Aல் 43 செண்டும் சேர்த்து 67 செண்டுகள் கிரையம் பெற்றுள்ளதாக வா.சா.ஆ.1 ஆவணத்திலும் துலங்குகிறது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் அசல் வாதிகளால் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. விஸ்திரணம் குறித்த வேறுபாடுகளின் விளக்கம் எதுவும் வாதி தரப்பில் வழக்கில் அளிக்கப்படவில்லை. இதுகுறித்து வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "சொத்து யாருக்கு பாத்தியப்பட்டதாக கட்சி செய்கிறோம் என்றால் எனது அப்பா கிரையம் வாங்கியது. அப்பா எந்த வருடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் 1942ல் கிரையம் வாங்கினார்கள். அந்த கிரைய பத்திரத்தில் கண்ட சொத்தை தான் நாங்கள் வழக்கு சொத்தாக காண்பித்திருக்கிறோம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தின் அசல் என் கைவசம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் அது தொலைந்து விட்டது" என்றும், “எனது பத்திரத்தில் 43 என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் திருத்தம் செய்யவில்லை. எனது அப்பா வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எவ்வளவு இடம் கிரையம் வாங்கினார்கள் என்றால் 2 சொத்தையும் சேர்த்து 67 செண்ட் ஆகும். நான் சொல்லும் மற்றொரு சொத்து எவ்வளவு செண்டு என்றால் 24 செண்ட் ஆகும்" என சாட்சியமளித்துள்ளார்.

13) வாதி வா.சா.1 ஆக குறுக்கு விசாரணையின் போது திருத்தம் ஏற்பட்டிருப்பதை ஒத்துக்கொண்டும் ஆனால் அதற்கு எதுவும் விளக்கம் அளிக்காமல்

சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வாதி தரப்பில் பட்டாவில் உள்ளவிஸ்தீரணம் குறைவின் காரணமாக பிரதிவாதிகள் வாதியின் இடத்தை ஆக்கிரமித்துள்ளதாக பிராதில் தெரிவித்துள்ளனர். ஆனால் வாதி குறிப்பிடும் பட்டா வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் Union of India Vs Vasavi Cooperative Housing Society LTD 2014 (2) SCC 269 என்ற மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழக்கில் பட்டா அல்லது வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் சொத்துக்கான உரிமை ஏற்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள உரிமை ஆவணமான வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதிக்கு தபசில் சர்வே எண்ணில் 33 செண்டுகள் மட்டுமே பாத்தியப்பட்டதாக துலங்குகிறது.

14) மேலும் நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 ஆவணங்களில் 2ம் தபசில் சொத்து இருப்பதாகவும், அதில் பிரதிவாதிகள் கட்டுமானங்கள் ஏற்படுத்தியதாகவும் குறிப்புகள் எதுவும் இல்லை. அதேபோல் ஆணையர் அறிக்கையில், தபசில் சொத்தின் வடக்கே காலிமனையும், தெற்கே திருநெல்வேலி முதல் திசையன்விளை ரோடும், மேற்கு தரிசு சர்வே எண்.1118/6, 1118/8 நிலமும் ரூசை என்பவர் பெயரிலும் கிழக்கே சர்வே எண்.1118/10 காலி மனை மற்றும், சர்வே எண்.1118/11ல் பள்ளிக்கூடமும் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. பிராது தபசில் சொத்திற்கு மேற்கே கட்டுமானங்கள் எதுவும் இருப்பதாக ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் துலங்கவில்லை. பிராது தபசில் சொத்தான சர்வே எண்.1118A/9ல் வாதிக்கு 43 செண்டு நிலம் உள்ளது என்றும், அதில் 2ம் தபசில் சொத்தான மேல்புறம் 1 ¾ செண்டு பிரதிவாதியால் ஆக்கிரமித்து கட்டுமானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் வாதி நிருபணம் செய்யவில்லை.

15) வாதி தரப்பில் வா.சா.ஆ.6 ஆன தாவா இடத்தில் வாதியின் அண்ணனின் வாரிசுகள் குடியிருந்து வருவதை காட்டும் ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள

மற்றொருசொத்தான சர்வே எண்.1125 வாய்மொழி பாகத்தின் படி வாதிக்கு ஒதுக்கப்பட்டதாகவும், அதில் வாதியின் அனுபவத்தை பிரதிவாதி இடைஞ்சல் செய்ததாக வாதியால் அ.வ.எண்.3/2020ல் மேற்படி விவரம் கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கின் பிராது வா.சா.1 ன் குறுக்கு விசாரணையின் போது பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் தபசில் சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், வாதியின் சகோதரர்களின் வாரிசுகள் தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்றும், அதை வாதியே தனது குறுக்கு விசாரணையின் போது ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளதாகவும், வழக்கிற்கு மேற்படி நபர்கள் அவசிய தரப்பினர்கள் என பிரதிவாதிகள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் பிராதில் வாதி தனது சகோதரர்களின் நலனுக்காகவும், வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டு இருந்த நிலையிலும், விளம்புகை பரிகாரம் வழக்கு தரப்பினர்களை மட்டுமே கட்டுப்படுத்தும் என்ற நிலையில், மேற்படி நபர்கள் வழக்கை தீர்மானிக்க அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

16) எனவே வாதி 2ம் தபசில் சொத்தின் சட்டப்படியான உரிமையாளர் என்றும், 2ம் தபசில் சொத்து 1ம் தபசில் சொத்தின் மேல்புறம் உள்ள 1 ¾ செண்ட் வாதிக்கு பாத்தியப்பட்டு அது பிரதிவாதிகளால் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் கட்டப்பட்டுள்ளது என்பதை வாதி தரப்பில் போதிய சான்றாவணங்கள் மூலம் நிருபிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதியானவர் சுத்தமான கரங்களுடன் வழக்கை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், விஸ்தீரணம் மாற்றம் குறித்து போதிய விளக்கம் அளிக்காத காரணத்தினாலும், வாதி கோரும் பரிகாரமானது வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என எழுவினா 1 முதல் 3ற்கு விடையளிக்கப்படுகிறது.

**<u>17) எழுவினா 4க்கான பரிசீலனையும் அதன் முடிவும்</u>:**

4) To what other relief?

வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு இதர பரிகாரங்கள் உள்ளதா?

வாதியின் வழக்கை கவனமாக பரிசீலிக்கையில் முடிவாக, வாதி 2ம் தபசில் 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என விளம்புகை செய்யவும், அதற்கு பின்னீடாக 2ம் தபசில் சொத்தின் சுவாதீனத்தினை காலிமனையாக நீதிமன்றம் குறிப்பிடுகிற தேதிக்குள் வாதி வசம் சுவாதீனம் தர உத்தரவிடவும் என்று கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கது என முடிவு காணப்பட்டுள்ள நிலையில் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கு செலவுத்தொகை இல்லை எனவும் முடிவுகண்டு இந்த எழுவினாவிற்கு விடையளிக்கப்படுகிறது.

**18) அ) முடிவாக, இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, 2ம் தபசில் 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதி என விளம்புகை செய்தும், அதற்கு பின்னீடாக 2ம் தபசில் சொத்தின் சுவாதீனத்தினை காலிமனையாக 3 மாத காலத்திற்குள் வாதி வசம் ஒப்படைக்கவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**ஆ) செலவுத்தொகை இல்லை என உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு. பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு. 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**

**விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்:**

**வாதி தரப்பில்;**

வா.சா.1 : பலவேசம்

பிரதிவாதிகள் தரப்பில்:

பி.சா.1 : செல்வராஜ்

குறியிடப்பட்ட சான்றாவணங்களின் பட்டியல்

வாதி தரப்பில் :

| Doc.No. | Date | Particulars of the documents |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.12.1942 | கிரையபத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | – | வாதியின் தந்தை மாடக்குடும்பன் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.3 | – | வாதியின் தாயார் வடிவம்மாளின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.4 | – | வாதியின் அண்ணன் பண்டாரத்தின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.5 | – | வாதியின் அண்ணன் ஆறுமுகத்தின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.6 | – | தாவா இடத்தில் வாதியின் அண்ணனின் வாரிசுகள் குடியிருந்து வருவதை காட்டும் ரசீதுகள் எண்ணம் 10 |
| வா.சா.ஆ.7 | – | வாதியின் சகோதரர் செல்லையாவின் இறப்பை பதிவு செய்ய கொடுத்த மனுவின் மீது சேரன்மகாதேவி சார் ஆட்சியர் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய கடிதம் |

பிரதிவாதி தரப்பில் :

| Doc.No. | Date | Particulars of the documents |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | – | 3ம் பிரதிவாதியின் தந்தை கிரையம் பெற்ற ஆவணம் சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.2 | – | அ.வ.எண்.3/2020 பிராது நகல் |
| பி.சா.ஆ.3 | – | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.3/2020ல் ஏற்பட்ட தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| பி.சா.ஆ.4 | 04.02.1980 | வாதியின் தகப்பனார் வாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த நன்கொடை ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.5 | 26.08.1980 | வாதியின் தகப்பனார் மாடன் எழுதிக்கொடுத்த சீர்திருத்த ஆவணம் சான்றிட்ட ஆவணம் |

<u>சாட்சி தரப்பு சான்றாவணம்</u>**: இல்லை**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**நாங்குநேரி**